eISSN 2456-5148
*Vol. 4 Issue: 03 August 2025*

# சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள்

# Ethics Reflected in Sangam Literature

**வெ. தனலட்சுமி[1], முனைவர் கோ. கிருஷ்ணன்[2],**

1.ஆராய்ச்சியாளர், தமிழ்த்துறை, கலை மற்றும் மானுட அறிவியல், மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், நிகர்நிலைப் பல்கலைக்கழகம், சென்னை 600078, தமிழ்நாடு, இந்தியா.

2.நெறியாளர், பேராசிரியர், தமிழ்த்துறை, கலை மற்றும் மானுட அறிவியல், மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், நிகர்நிலைப் பல்கலைக்கழகம், சென்னை - 600078, தமிழ்நாடு, இந்தியா.

**V. Dhanalakshmi[1], Dr. G. Krishnan[2],**

*1. Research Scholar, Department of Tamil, Faculty of Arts and Humanities, Meenakshi Academy of Higher Education and Research (Deemed to be University), Chennai 600078, Tamil Nadu, India.*

*2. Research Guide, Professor Department of Tamil, Faculty of Arts and Humanities, Meenakshi Academy of Higher Education and Research (Deemed to be University), Chennai - 600078, Tamil Nadu, India.*

*EMAIL ID: devidhanam176@gmail.com, Orcid : https://orcid.org/0009-0006-7095-483X*

## Abstract

Sangam literature reveals the ethical principles of human life during that period. These literary works are broadly divided into two categories: Akam and Puram. Akam poems focus on themes related to love and family, while Puram poems deal with heroism, generosity, and governance. Although ethics are not explicitly stated as commandments in Sangam literature, moral principles are subtly conveyed through the ideas and narratives presented in the poems. Tamils earned wealth, practiced righteousness (aram), and lived joyfully, regarding their domestic life as a virtuous existence. They famously refused to commit any blameworthy acts, even if the entire world were offered as a prize. During the Sangam period, 'aram' (ethics/righteousness) was central to human relationships. The Sangam era was a time when human ethics, untainted by religious dogma, naturally prevailed. Humans were not isolated beings; they were considered a drop in the ocean of society, with society residing within them and they within society. The more a human being connects with everyone and everything, the greater their happiness expands. To truly revel in this abundance of happiness, humans must embrace 'aram' – the universal principle that permeates all aspects of life. Generosity (kodai) was as highly valued by Tamils as heroism. This study aims to clarify the concept of 'aram' as presented in Sangam literature, and exploring this topic is the primary objective of this research paper.

**Keywords:** Aram (Ethics/Righteousness), Generosity, Aid, Truthfulness, Just Governance, Enduring Wealth, Poverty.

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கியங்கள், அக்கால மனிதர்களின் வாழ்வியல் அறங்களை நமக்குக் காட்டுகின்றன. அவை, அகம் மற்றும் புறம் என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அகம் காதல், குடும்பம் சார்ந்தும், புறம் வீரம், கொடை, ஆட்சி சார்ந்தும் பாடல்களைக் கொண்டுள்ளது. சங்க இலக்கியங்களில் அறங்கள் நேரடியாக வலியுறுத்தப்படவில்லை என்றாலும், பாடல்களில் வரும் கருத்துக்கள் மூலம் அறநெறிகள் உணர்த்தப்படுகின்றன.

தமிழர் பொருள் ஈட்டி அறம்செய்து இன்புற்றனர் இல்வாழ்க்கையை அறவாழ்க்கையாகக் கொண்டனர். உலகே பரிசாகக் கிடைத்தாலும் பழிதரும் செயல்களைச் செய்ய மறுத்தனர். சங்க காலத்தில் அறத்தை மனித உறவின் மையமாகக் கொண்டிருந்தனர். சமயக் கலப்பில்லாத மானிட அறம்

இயல்பாக நிலவிய காலம், சங்ககாலம். மனிதன் தனியானவன் அல்லன். அவன் சமூகக் கடலின் ஒருதுளி. அவனுக்குள்ளே சமூகம் - சமூகத்துக்குள்ளே அவன். மனிதன் எல்லாரோடும் எல்லாவற்றோடும் எவ்வளவுக்கெவ்வளவு தன்னை இணைத்துக் கொள்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவனுடைய மகிழ்ச்சி பெருகுகிறது. இந்த மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க வேண்டும் என்றால் அனைத்தையும் ஊடுருவிச் செல்லும் பொதுவிதியான அறத்தை மனிதன் ஏற்க வேண்டும். வீரத்தைப் போல் கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டது. சங்க இலக்கியத்தில் அறம் பற்றிய தெளிவே இந்த ஆய்வாகும். இதைப்பற்றி ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்:** அறம், கொடை, உதவி, வாய்மை, நேரிய ஆட்சி, நிலையான செல்வம், வறுமை.

**முன்னுரை:**

ஈயென இரத்தல் இழிந்தன்று அதன்எதிர் ஈயேனென்றல் அதனினும் இழிந்தன்று - என்கிறார் கழைதின் யானையார். இருப்போரின் வாழ்வு இல்லாதோர்க்கு ஈவதாலேயே சிறக்கும். அறமும் மறமும் போற்றி வளர்த்த மரபில் வந்தவர்கள் தமிழர்கள். எளிய உயிர்கள்பால் இரக்கம் கொள்வதே உயர்ந்த மனிதப்பண்பு. தமிழரின் தாய்ப்பாலாய் விளங்கும் முப்பால் அறம், பொருள், இன்பம் பற்றிப் பாடப்பட்டது. அறநூல்கள் மனிதனை நல்வழிப்படுத்தவே எழுதப்பட்டன. கொடையும் தயையும் பிறவிக்குணம் என்கிறார் ஔவையார். அவருக்கு நெல்லிக்கனி ஈந்த அதியனோடு சேர்த்து ஏழு வள்ளல்கள் பாரி, ஓரி, காரி, ஆய், நள்ளி, பேகன் எனவாகும். இரந்து வந்த புலவனுக்குத் தன் தலையையே கொடுக்க வந்த குமண வள்ளலைப் புறநானூறு போற்றுகிறது. `ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே` என்ற புறநானூற்றுப் பாடலில் ஒவ்வொருவரும் அவரவர்தம் கடமைகளைச் சரிவரச் செய்வதே அறம் என்கிறார் புலவர் பொன்முடியார். பரிசில் பெற வந்த புலவர் ஒருவற்கு அரசரின் மகன் தாம் உருட்டி விளையாடும் நடைவண்டியைப் பரிசாய்க் கொடுத்தானாம். இதை `நடை கற்குமுன் கொடை கற்றாயே` என்று அவர் மெய்சிலிர்த்துப் போற்றுகிறார்.

சங்ககாலத்திற்குப் பிந்தைய அற இலக்கியங்களின் காலத்தை அறநெறிக்காலம் என்பர். அறநெறிக்கால அறங்கள் சமயம் சார்ந்தவை. ஆனால், சங்க கால அறங்கள் இயல்பானவை. அந்த வகையில் சங்ககால வாழ்க்கையில் இருந்து உருவான அறங்களே சங்க இலக்கியத்தில் பதிவு பெற்றுள்ளன. சங்க அறங்கள் சமயங்களிடமிருந்து இரவல் பெறப்பட்டவை அல்ல. அவ்வாறான அறங்களைப் பற்றி இவ்வாய்வுக் கட்டுரையில் விரிவாகக் காணலாம்.

**தமிழில் அற நூல்கள்**

சங்க இலக்கியங்களிலே ஆங்காங்கு உரிய அறக் கருத்துகளைக் கூறுவதற்குப் புலவர்கள் தவறவில்லை. சமூகப் போக்கில் மாறுதல்கள் விளைய வேண்டும் என விரும்பிய சான்றோர்கள் அவ்வப்போது அறநூல்கள் வரைந்தனர். பதினெண் கீழ்கணக்கு நூல்களில் பதினொரு நூல்கள் அறநூல்கள். இவை தமிழரின் அறவாழ்வைக் காட்டுவன. இவை தவிர பிற்காலத்தில் ஔவையார், குமரகுருபரர், அதிவீரராம பாண்டியர், சுப்பிரமணிய பாரதியார் போன்ற புலவர் பெருமக்கள் நீதிநூல்களை இயற்றியுள்ளனர். சிறுவர்க்கெனவே ஆத்திச்சூடி, மூதுரை, நல்வழி, கொன்றைவேந்தன் போன்ற நீதிநூல்களை இயற்றியுள்ளனர்.

ஔவையார் – வெற்றிவேற்கை

அதிவீரராம பாண்டியன் - நன்னெறி

சிவபிரகாசர் - நீதி நூல்கள் போன்றவை எழுதப்பட்டன. சதகம் எனப்படும் நூறு பாடல்கள் கொண்ட நீதி நெறித் தொகுப்புகளும் தோன்றின.

" அறத்தான் வருவதே இன்பம் " (திருக்குறள் பாயிரம் 39)

" அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்

இழுக்கா இயன்றது அறம். " (திருக்குறள் பாயிரம் 35)

என்று " பொய்யாமொழிப்புலவர் " உரைக்கிறார். இன்றைய " புதுமைக்கவிஞர் பாரதியோ " அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல் எனத்தொடங்கி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்பதே தலையாய அறமென்கிறார்.

" செல்லுயிர் கொடுத்தேனும் செங்கோலை

வளையாது

நிமிர்த்துவது அரசியல் அறமாகும்." (சிலம்பு 25 98-99)

என வலியுறுத்துகிறது. " மணிமேகலை" கருணை கூர்ந்து யாவர்க்கும் வேண்டுவன ஈதலே இன்பம் என்று இளையான்குடி மாறநாயனார் வாழ்ந்து காட்டினார்.

**அறத்தில் வணிக நோக்கம் கொள்ளாமை**

அறம் செய்வதில் வணிக நோக்கம் இருக்கக்கூடாது என்பது சங்ககால மக்களின் கருத்தாக இருந்தது. இப்பிறப்பில் அறம் செய்தால் அதன் பயனை மறுபிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்கு கூடாது எனக் கூறப்பட்டது.

“இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்

அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்“ - புறம்.

எனச் சங்ககால மன்னர்களில் ஒருவரான ஆய் பற்றி ஏணிச்சேரி முடமோசியார் குறிப்பிட்டுள்ளார். நோக்கமின்றி அறம் செய்வதே மேன்மை தருவது என்பது இதில் உணர்த்தப்பட்டுள்ளது.

**அரசியல் அறம்**

சங்கப் பாக்களில் அறம் பற்றிய அறிவுரைகள் பெரும்பாலும் அரசர்களை முதன்மைப்படுத்தியே கூறப்பட்டுள்ளன. 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்', ‘அறன்நெறி பிழையாத் திறனறி மன்னர்’ மன்னர்களுடைய செங்கோலும் வெண்கொற்றக்குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன. அரசன் செங்கோல் போன்று நேரிய ஆட்சியை மேற்கொள்ள வேண்டும் என்பது பல பாடல்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நீர்நிலை பெருக்கி நிலவளம் கண்டு உணவுப்பெருக்கம் காண்பதும் அதனை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதும் அரசனின் கடமையாகச் சொல்லப்பட்டது. குற்றங்களை, அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும் என்கிறார் ஊன் பொதிப் பசுங்குடையார். அரசன் அறநெறியில் ஆட்சிசெய்வதற்கு அமைச்சரும் உதவினர். நன்றும் தீதும் ஆய்தலும் அன்பும் அறனும் காத்தலும் அமைச்சர் கடமை என்கிறது மதுரைக்காஞ்சி. 'செம்மை சான்ற காவிதி மாக்கள்' என்று அமைச்சர்களை மாங்குடி மருதனார் போற்றுகிறார்.

**அறங்கூறவையம்**

அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன. அறம் கூறு அவையம் பற்றி 'அறம் அறக் கண்ட நெறிமான் அவையம்' என்கிறது புறநானூறு. உறையூரிலிருந்த அறஅவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது, அங்குள்ள அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது.

**போர் அறம்**

தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு புறப்பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

எறியார் எறிதல் யாவணது எறிந்தோர்

எதிர்சென்று எறிதலும் செல்லான் - புறம் 301.

**கொடை அறம்**

வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டது. ஒரு மனிதன் தன்னுடைய மகிழ்ச்சியை மறந்து மற்றவர் மகிழ்ச்சியை நாடுவதுதான் உண்மையான மகிழ்ச்சி. அதாவது தன் மகிழ்ச்சியை மறப்பதுதான் மகிழ்ச்சி.

செல்வத்துப் பயனே ஈதல்

துய்ப்பேம் எனினே தப்புந பலவே (புறம் 189 :7-8)

என்றார் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்.

கொடையின் சிறப்பால் வள்ளல் எழுவர் போற்றப்படுவது, பழந்தமிழர் கொடை மாட்சியைப் புலப்படுத்துகிறது. எழுவரின் கொடைப் பெருமை சிறுபாணாற்றுப்படையிலும் பெருஞ்சித்திரனார் பாடலிலும் பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஆற்றுப்படை இலக்கியங்கள், கொடை இலக்கியங்களாகவே உள்ளன. பதிற்றுப்பத்து சேர அரசர்களின் கொடைப் பதிவாகவே உள்ளது. புறநானூற்றின் கொடைப்பதிவும் குறிப்பிடத்தக்கது.

அரியன என்று கருதாது, தயங்காது கொடுத்தலும் ஈதலால் வரும் இழப்புக்கு வருந்தாமையும் நாள்தோறும் கொடுத்தலும் கொடைப் பெருமைகளாகப் பேசப்படுகின்றன. வள்ளல்கள் “இல்லோர் ஒக்கல் தலைவன்”, “பசிப்பிணி மருத்துவன்” என்றெல்லாம் போற்றப்பட்டனர். வழங்குவதற்குப் பொருள் உள்ளதா என்று கூடப் பார்க்காமல் கொடுக்கும் பிடவூர்க்கிழான் மகன் பெருஞ்சாத்தனை நக்கீரர் பாராட்டுகிறார். வள்ளலின் பொருள் இரவலனின் பொருள், வள்ளலின் வறுமை இரவலனின் வறுமை என்று பெரும்பதுமனார் குறிப்பிடுகிறார்.

உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன் என்கிறார் ஔவையார். இரவலர் வராவிட்டாலும் அவர்களைத் தேடி வரவழைத்தல் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் இயல்பு என்கிறார் நச்செள்ளையார். பேகன் மறுமை நோக்கிக் கொடுக்காதவன் என்கிறார் பரணர். தன்னை நாடி வந்த பரிசிலன் பொருள் பெறாமல் திரும்புவது, தான் நாட்டை இழந்த துன்பத்தைவிடப் பெருந்துன்பம் எனக் குமணன் வருந்தியதாகப் பெருந்தலைச் சாத்தனார் குறிப்பிட்டுள்ளார். எல்லாவற்றையும் கொடுப்பவன் என்று மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாராட்டுகிறார்.

புற இலக்கியங்களில் மட்டுமன்றி அக இலக்கியங்களிலும் ஈதல் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. ஈயாமை இழிவு, இரப்போர்க்கு ஈயாது வாழ்தலைவிட உயிரை விட்டுவிடுதல் மேலானது என்றெல்லாம் கலித்தொகையில் கூறப்பட்டுள்ளது. வாழும் உயிர்க்கு அறமே இன்பம் என்பதை திருக்குறள் வலியுறுத்துகிறது.

" சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு

ஆக்கம் எவனோ உயிர்க்கு. " (திருக்குறள் - பாயிரம் - 31)

அதனால்தான் இல்லறம் துறவறம் என இருவேறு வாழ்க்கை முறையிலும் அறம் விடாது பற்றிக்கிடக்கிறது. ஆதலால்

" அறம் செய விரும்பு. " (ஆத்திச்சூடி)

வள்ளல்கள் மட்டுமன்றிப் புலவர்களும் ஈந்து மகிழ்ந்ததை இலக்கியம் பதிவு செய்துள்ளது. தான் பெற்றதைப் பிறருக்கு வழங்கும் பெருஞ்சித்திரனாரின் பேருள்ளம் புறநானூற்றில் புலப்படுத்தப்பட்டிருக்கிறது.

**உதவி**

பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் 'உதவியாண்மை' என்று குறிப்பிடுகிறார். தன்னைத் தாண்டிப் பிறரைப் பற்றிச் சிந்திக்கும்போது, இருக்கும் நிலையை ஒதுக்கி, தான் இருக்க வேண்டிய நிலை எது என்பதை மனிதன் உணர்கிறான் எனலாம். அன்பு என்ற சுடருக்குத் தியாகம்தானே எண்ணெய்யாக இருக்க முடியும்?

பிறர் நோயும் தம் நோய்போல் போற்றி அறன்அறிதல்

சான்றவர்க்கு எல்லாம் கடன் (கலி.139)

என்று பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி, உதவுதல் பற்றி நல்லந்துவனார் குறிப்பிடுகிறார். 'உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பது தான்' என்கிறார் நல்வேட்டனார்.

சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்

புன்கண் அஞ்சும் பண்பின்

மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே (நற். 210)

உறவினர் கெட, வாழ்பவனின் பொலிவு அழியும் என்று பெருங்கடுங்கோ குறிப்பிடுகிறார். இதனால்தான் 'செல்வம் என்பது சிந்தையின் நிறைவு' என்கிறது தமிழ் இலக்கியம். 'நிறைவடைகிறவனே செல்வன்' என்கிறது சீன நாட்டுத் தாவோயியம். உடல் உறுப்புகள் ஒன்றுக்கொன்று உதவுவது போலச் சமூக உறுப்புகளான மனிதர்களும் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்ள வேண்டும். இதயம் இரத்தத்தை எல்லாம் தனக்கே வைத்துக் கொண்டால் என்ன ஆவது? இரைப்பை, உணவை அப்படியே தானே வைத்துக் கொண்டால் என்ன ஆவது? பிறருக்கு உதவாமல், மனிதத்திற்குக் கொடும்பாவி கட்டுவது சங்க காலத்தில் இல்லை.

**வாய்மை**

வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேகம் நாவே உண்மையான நா என்ற கருத்தை, "பொய்யார் செத்தா", “பொய்படுபறியா வயங்கு செந்தா” என்று இலக்கியங்கள் கூறுகின்றன. நாக்கு ஓர் அதிசயத் திறவுகோல் என்பார்கள். இன்பத்தின் கதவைத் திறப்பதுவும் அதுதான். துன்பத்தின் கதவைத் திறப்பதுவும் அதுதான். மெய் பேசும் நா மனிதனை உயர்த்துகிறது. பொய்பேசும் நா மனிதனைத் தாழ்த்துகிறது. 'பிழையா நன்மொழி' என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றது; இதற்கு மாறாகப் 'பொய் மொழிக் கொடுஞ்சொல்' என்று பொய்யைக் குறிப்பிடுகிறது. நிலம் புடைபெயர்ந்தாலும் பொய் சொல்லக் கூடாது என்பது பல பாடல்களில் வற்புறுத்தப்பட்டுள்ளது. வாய்மையைப் பற்றி, சங்ககால மக்கள் கொண்டிருந்த கருத்தழுத்தத்தை இப்பகுதிகள் புலப்படுத்துகின்றன. பொய்ச்சான்று கூறாமையும் வலியுறுத்தப்பட்டது.

**முடிவுரை**

சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள், ஒரு மனிதன் தனியாகவும் சமூக உறுப்பினனாகவும் இயங்குவதற்கும் அவனது பண்பு நலனை உருவாக்குவதற்கும் உதவும் விதிமுறைகள் எனலாம். தாம் சிந்திக்காமல் பிறர் சொல்ல அறியும் அறம் மூன்றாம் தரமானது. சிந்தித்து அறிந்து கொள்ளும் அறம் இரண்டாம் தரமானது. இயல்பாக அறியும் அறம் முதல் தரமானது. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இயல்பான முதல் தரமான அறங்கள் எனலாம். மனம் புத்தி சித்தம் ஆகிய அகநிலை உறுப்புகளை அன்பில் தோயச் செய்து யார்மாட்டும் அன்புடையராய் வாழ்வதே அறம் ஆகும். வாழும் உயிர்க்கு அறத்தை விட நன்மையாவது ஏதுமில்லை என்கிறது. சங்க இலக்கியங்கள், அன்றைய மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் அறநெறிகளையும் நமக்குக் காட்டுகின்றன. சங்க இலக்கியங்கள், அக்கால மனிதர்களின் வாழ்வியல் அறங்களை நமக்குக் காட்டும் ஒரு கண்ணாடியாகத் திகழ்கின்றன. சங்க இலக்கியங்களில் காணப்படும் அறங்கள், இன்றைய சமுதாயத்திற்கும் ஒரு வழிகாட்டியாக உள்ளன என்பதை இவ்வாய்வுக் கட்டுரையின் வாயிலாக அறியலாம்.

**துணைநூற்பட்டியல்**

1. *புறநானூறு மூலமும் உரையும், புலியூர் கேசிகன், சரண் பதிப்பகம், சென்னை.*
2. *திருக்குறள் மூலமும் உரையும், பரிமேலழகர், அருணா பதிப்பகம், சென்னை.*

References:

1. *Purananuru: Text and Commentary*, by Puliyur Kesikan. Saran Pathippagam, Chennai.
2. *Thirukkural: Text and Commentary*, by Parimelazhagar. Aruna Pathippagam, Chennai.

Copyright (c) 2025 Author | **License**: This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.